**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 09-03-2021**

**திருச்சிராப்பள்ளி(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2021-03-09 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2021-03-10 | 2021-03-11 | 2021-03-12 | 2021-03-13 | 2021-03-14 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 36.0 | 36.0 | 36.0 | 36.0 | 36.0 |
| டிமின் (° C) | 24.0 | 24.0 | 24.0 | 24.0 | 24.0 |
| RH I (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| RH II (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கிமீ) | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| மேகக்கணி (ஆக்டா) | 2 | 3 | 5 | 5 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

இந்த வாரத்தில் ஒரு நாள் மட்டும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. சராசரி ஈரப்பதம்(காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (85.0 & 40.0%), 36.0°C மற்றும் 24.0°C என எதிர்பார்க்கப்படுகிறது. மழை பொழியக்கூடிய மேகங்கள் ஆங்காங்கே காணப்படும். காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 10.0 கி.மீ வேகத்தில் வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் மழை அளவானது இந்த வாரம் (10.03.2021 முதல் 16.03.2021 வரை) சராசரியை விட குறைவாக பொழிய வாய்ப்புள்ளது (0.72 மி.மீ. லிருந்து 0.07 மி.மீ.)

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

காய்கறிப் பயிரில் பூ பூக்கும் தருணத்தில் அர்கா வெஜிடபிள் காய்கறி நுண்ணூட்டக்கலவை 3 கிராம்/ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் என அறிவுறுத்தப்படுகிறது.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| அரிசி | நெற்பயிரில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த மெத்தில் டீமெட்டான் 25% EC 1000 மி.லி/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கருப்பு கிராம் | உளுந்தில் பூ உதிர்வதை தவிர்ப்பதற்கும், வறட்சியை தாங்கி நன்றாக வளருவதற்கும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பயிர் ஒண்டர் (பல்ஸ் ஒண்டர்)-யை 2 கிலோ / 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| கரும்பு | கரும்பில் இடைக்கணுப்புழு பரவலாக காணப்படுவதால் நட்ட 150 வது மற்றும் 210 வது நாளில் சோகையை உரித்து விடவும். அதனை மண்ணில் பரப்பி அல்லது புதைத்து விட வேண்டும். ஒரு எக்டருக்கு இனக்கவர்ச்சி பொறியை 10 எண்ணிக்கை வைக்க வேண்டும். அந்த பொறியில் இருக்கும் செப்டாலூர்யை 45 நாட்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும். முட்டை ஒட்டு உண்ணியான டிரைகோகிரம்மாகைலோனிஸ் அட்டையை 2.5ஈ.சி/எக்டர் என்ற வீதம் 15 நாட்களுக்கு ஒரு முறை என்றவாறு 4வது மாதத்திலிருந்து வயலில் கட்டிவிட வேண்டும். |
| பஞ்சு | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் இலை கருகல் நோய் ஏற்படக்கூடும். ஆரம்பத்திலேயே அறிகுறிகள் தெரிந்தவுடன் மேங்கோசெப் 2 கிலோ/ எக்டர் என்ற அளவில் 2 அல்லது 3 முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். |
| சோர்கம் ( ஜோவார் / கிரேட் மில்லெட் ) | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக அசுவினி பூச்சியின் தாக்கம் சோளத்தில் அதிகம் ஏற்படக்கூடும். எனவே, இதனைக் கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 30 EC 500 மி.லி/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| சோளம் | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோய் ஏற்படக்கூடும். இதனை கட்டுப்படுத்த மேங்கோசெப் 1 கிலோ/எக்டர் என்ற அளவில் நடவு செய்த 20 நாட்களுக்கு பிறகு தெளிக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் அசுவினி பூச்சியினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு டைமீதோயேட் 30% EC மி.லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| சேஷமே ( கிங்கேல்லி / டில்) | எள்ளு பயிரில் பாக்டீரியா இலை கருகல் நோயினை தவிர்ப்பதற்கு ஸ்ட்ரெப்டோசைக்ளின் 500 பிபிஎம் மருந்தினை 120 கிராம்/ஏக்கர் என்ற அளவில் தெளிக்கவும். |
| ஆமணக்கு | ஆமணுக்கில் காய்த்துளைப்பானை கட்டுப்படுத்த ப்ரோபெனோபோஸ் 50 EC மருந்தினை 500 மி.லி/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| ஒக்ரா / லேடிஸின் விரல் | பின்வரும் வானிலை காரணிகளின் அடிப்படையில் (வெப்பம்(>30°C), ஈரப்பதம்(40-70%), காற்றின் வேகம் மணிக்கு(<5 கி.மீ) &மழை(0-30மி.மீ /வாரம்)) இனப்பெருக்க நிலையில் தண்டுத்துளைப்பானானது புழுவாக உருவாகக்கூடும். வெண்டையில் தண்டு/காய்த் துளைப்பானை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப் பொறியை எக்டருக்கு 12 என்ற வீதம் பொறுத்த வேண்டும் அல்லது டிரைகோகிரம்மா சிலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை எக்டருக்கு ஒரு லட்சம் என்ற வீதம் விட வேண்டும். |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தக்காளியில் வெள்ளை ஈ யின் தாக்கம் அதிகம் தென்படும். இதனைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பொறியை எக்டருக்கு 12 என்ற வீதம் வைத்து கட்டுப்படுத்தவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | பின்வரும் வானிலை காரணிகளின் அடிப்படையில் (வெப்பம்(>30°C), ஈரப்பதம்(>70%), காற்றின் வேகம் மணிக்கு(>5 கி.மீ) &மழை(0-30மி.மீ /வாரம்)) தாவர நிலைமுதல் கனி பருவம் வரை நிலை வரை தண்டுத்துளைப்பானானது புழுவாக உருவாகக்கூடும். கத்திரியில் தண்டு/காய்த் துளைப்பானை கட்டுப்படுத்த எமாமெக்டின் பென்சோயேட் 5% SG 4கிராம்/10லிட்டர் என்ற அளவில் நடவு செய்த ஒரு மாதத்திலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். |
| வாழை | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வாழையில் குருத்து சுருட்டு அழுகல் நோயின் தாக்கம் ஏற்படக்கூடும். எனவே இதனைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 75% WP @ 1.5-2.0 கிலோ/ எக்டர் என்ற அளவில் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| மிளகாய் | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக மிளகாயில் இலைப்பேன் தாக்கம் அதிகம் காணப்படும். எனவே, இதனைக் கட்டுப்படுத்த இமிடாக்ளோபிரிட் 17.8 SL 3 மி.லி/ 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தேங்காய் | தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மி.லி வேர் மூலம் கொடுக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கோடை காலங்களில் ஒட்டுண்ணியின் தாக்கம் கால்நடைகளில் அதிகம் ஏற்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்பட நேரிடும். இதனால் கால்நடைகள் மிகவும் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணமும் காணப்படும். இவற்றிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3 மி.லி பியூடாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்க வேண்டும். |